சோலார் மின்சாரம்
கனரக தொழிற்சாலைகள், டையிங், நூல் மில்களுக்கு தேவையான சோலார் மின்சாரம் குறைந்த விலையில் சப்ளை செய்கிறோம்
தொடர்புக்கு
96005 48581

நல்லவே எண்ணல் வேண்டும்.., எண்ணிய முடிதல் வேண்டும்..,

# சக்கர வியூகம்

தினசரி “தேமதுரத் தமிழோசை உலகமெலாம்” புலனாய்வு நாளிதழ்
www.SAKKRAVIYUGAM.com

TAMIL PRESS CLUB
தமிழ் பிரஸ் கிளப்
Reg.No: 12/2013
தமிழ்நாடு, பாண்டிச்சேரியில் சிறப்பாக செயல்பட்டு வரும் பொது நல அமைப்பிற்கு 2026 ஆம் ஆண்டு உறுப்பினர் சேர்க்கை அனைத்து மாவட்டங்களிலும் ஆரம்பம்...
ஆர்வமுள்ளவர்கள் அமைப்பாளராக இணைந்திட
88705 00000
99 44 616 559

Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 177 21.12.2025 SUNDAY MARGAZHI : 6 PRICE : RS.5/-
மலர் : 01 இதழ் : 177 21.12.2025 ஞாயிற்றுக்கிழமை மார்கழி : 6 விலை : ரூ.5/–

3 “உதயநிதியை இளம் பெரியார் எனக் கூறியிருப்பது கஷ்டகாலம்” - முன்னாள் அமைச்சர் காமராஜ்

4 “நாங்கள் இருவரும் டெல்லி செல்வோம்” : முதல்வர் சர்ச்சை குறித்து டி.கே.சிவகுமார் பேச்சு

2 “இன்றைக்கு ஆட்சியாளர்கள்தான் வாக்காளர்களை தேர்வு செய்கின்றனர்” -எஸ்ஐஆர் குறித்து சீமான் சீற்றம்

# “மெகா காட்டாட்சியில் இருந்து மேற்கு வங்கம் விடுதலை பெற வேண்டும்” : பிரதமர் மோடி

டெல்லி, டிச.21-


மெகா காட்டாட்சியில் இருந்து மேற்கு வங்கம் விடுதலை பெற வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மேற்கு வங்கத்தின் நாடியா மாவட்டத்தில் உள்ள ராணாகாட்டில் தேசிய நெடுஞ் சாலைத் திட்டங்களுக்கு பிரதமர் மோடி இன்று காலை 11 மணி அளவில் அடிக்கல் நாட்டுவதாக இருந்தது. மேலும், நிறைவடைந்த திட்டங்களை தொடங்கிவைத்து அவர் உரையாற்றுவார் என தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதற்காக இன்று காலை 10.40 மணி அளவில் கொல்கத்தா வந்த பிரதமர் மோடி பின்னர் அங்கிருந்து ஹெலிகாப்டர் மூலம் ராணாகாட்டில் உள்ள தாஹேர்பூர் ஹெலிபேட் தளத்துக்குச் செல்ல இருந்தார். எனினும், அப்பகுதியில் நிலவிய அடர்ந்த மூடுபனியால் ஏற்பட்ட காட்சித் தெளிவின்மை காரணமாக ஹெலிகாப்டர் தரையிறங்க முடியாமல் கொல்கத்தாவுக்கு திரும்பியது.

பிரதமர் வர இருந்ததால், கூட்டம் நடைபெற இருந்த தாஹேர்பூர் நேதாஜி பூங்காவில் ஏராளமான மக்கள் கூடி இருந்தனர். பிரதமர் நேரில் வர முடியாத நிலையில், காணொலி காட்சி வாயிலாக அவர் உரையாற்றினார். அப்போது அவர் பேசியதாவது: அன்பு, கருணை மற்றும் பக்தியின் உயிருள்ள உருவகமான ஸ்ரீசைதன்ய பிரபு தோன்றிய பூமி நாடியா. வந்தே மாதரம் என்ற அழியாத பாடலின் பூமி மேற்கு வங்கம். அடிமைப்படுத்தப்பட்ட இந்தியாவில் வந்தே மாதரம் மூலம் ஒரு புதிய உணர்வை உருவாக்கிய பக்கிம் சந்திர சாட்டர்ஜி போன்ற ஒரு ஞானியை இந்த நிலம் நாட்டுக்கு வழங்கியது.

கடந்த மாதம் பிஹார் மக்கள் தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு ஒரு மகத்தான ஆணையை வழங்கினர். கங்கை பிஹார் வழியாக மேற்கு வங்காளத்தை அடைகிறது என்று நான் சொன்னேன். எனவே, பிஹார், மேற்கு வங்கத்தின் வெற்றிக்கு வழி வகுத்துள்ளது. பிஹார் காட்டாட்சியை ஒருமனதாக நிராகரித்துள்ளது. 20 ஆண்டுகளுக்குப் பிறகு அது தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு முன்பைவிட அதிக இடங்களை வழங்கியுள்ளது. இப்போது மேற்கு வங்கத்தில் நிலவும் மெகா காட்டாட்சியில் இருந்து நாம் நம்மை விடுவித்துக்கொள்ள வேண்டும்.



அராஜகம் மற்றும் ஊழல்களால் மூழ்கியிருக்கும் ஒரு அரசாங்கம் மேற்கு வங்கத்தில் உள்ளது. இன்றும்கூட, ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் மதிப்புள்ள வளர்ச்சித் திட்டங்கள் மேற்கு வங்கத்தில் சிக்கித் தவிக்கின்றன. இன்று நான் மனதின் ஆழத்தில் இருந்து ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். திரிணமூல் காங்கிரஸ் கட்சி மோடியை, பாஜகவை எதிர்க்க விரும்பினால் அது அதன் முழு பலத்துடன் எதிர்க்கட்டும். ஆனால், வங்கத்தின் வளர்ச்சியை, இங்குள்ள எங்கள் சகோதர சகோதரிகளின் வளர்ச்சியை இந்த அரசு ஏன் தடுக்க வேண்டும்?

நீங்கள் (டிஎம்சி) மோடியை மீண்டும் மீண்டும் எதிர்க்கலாம். ஆனால், மேற்கு வங்க மக்களை துயரத்தில் ஆழ்த்தாதீர்கள். அவர்களின் உரிமைகளைப் பறிக்கவும், கனவுகளை சிதைக்கவுமான பாவத்தைச் செய்யாதீர்கள். வங்கத்தின் அறிவார்ந்த மக்களிடம் இரட்டை இன்ஜின் பாஜக அரசாங்கத்தை அமைத்து, அது எவ்வளவு விரைவாக வங்கத்தை வளர்க்கப் பாடுபடுகிறது என்பதை பார்க்குமாறு நான் வேண்டுகோள் விடுக்கிறேன்.

ஊடுருவல்காரர்களைப் பாதுகாக்க டிஎம்சி எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது. ஊடுருவல் பிரச்சினையை பாஜக எழுப்பும்போதெல்லாம், டிஎம்சி எங்களுக்கு எதிராக தவறான பிரச்சாரங்களை செய்கிறார்கள். இவ்வாறு பிரதமர் மோடி தெரிவித்தார்.

மேற்கு வங்க பயணத்தை முடித்துக்கொண்டு பிரதமர் மோடி அசாம் செல்கிறார். குவாஹாட்டி செல்லும் பிரதமர், லோக்ப்ரியா கோபிநாத் பர்தோலோய் சர்வதேச விமான நிலையத்தில் புதிய முனையத்தின் கட்டிடத்தைப் பார்வையிட்டு தொடங்கி வைக்கிறார். பின்னர், அங்கு திரண்டிருப்போரிடையே அவர் உரையாற்ற உள்ளார்.

புதிதாக கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த புதிய முனையக் கட்டிடம் சுமார் 1.4 லட்சம் சதுரமீட்டர் பரப்பில் அமைந்துள்ளது. இது ஆண்டுக்கு 1.3 கோடி பயணிகளை கையாளும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.



## திண்டுக்கல் அனுகிரகா கல்லூரியில் தமிழ் விக்கிப்பீடியா அறிவியல் பயிலரங்கம்

சின்னாளபட்டி, டிச.21

திண்டுக்கல் மாவட்டத்தில் நடைபெறும் மாநில அறிவியல் மாநாட்டிற்கு முன்னோட்டமாக மாவட்டத்தில் உள்ள பல கல்லூரிகளில், அறிவியல் கட்டுரைகள் உருவாக்கம் பயிற்சிஅளிக்கப்பட்டு வருகிறது. திண்டுக்கல் அருகே உள்ள அணுகிரகா கல்லூரியில் உள்ள இயற்பியல் துறை சார்பாக அறிவியல் மாநாட்டில் கலந்துகொள்ளும் மாணவ மாணவியருக்கான பயிலரங்கம் நடைபெற்றது இந்த பயிலரங்கத்தில் தமிழ் விக்கிப்பீடியா சார்பாக மாணவர்களுக்கு அறிவியல் கருத்துக்களை எவ்வாறு விக்கிப்பீடியாவில் எழுதுவது எப்படி என்ற பயிற்சி அளிக்கப்பட்டது. அதனுடன் தமிழில் அறிவியல் கட்டுரைகள் உருவாக்கவும் பயிற்சி அளிக்கப்பட்டது. கருத்தரங்கில் எழுத்தாளர்கள் நீச்சல் கார்ன் இராஜராமன் மற்றும் கீ.மூர்த்தி சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்டு பயிற்சி அளித்தனர். அறிவியல் பயிலரங்கத்திற்கு கல்லூரியின் செயலாளர் தந்தை முனைவர் ஜான்பி ரிட்டோ, முதல்வர் தந்தை முனைவர் பெர்ணாட்ஷா, ஆகியோர் தலைமை தாங்கினார்கள். இயற்பியல் துறை தலைவர் சகாய ராஜன் முன்னிலை வகித்தார். திண்டுக்கல் மாவட்டத்தை சேர்ந்த 10 மேற்பட்ட கல்லூரியில் இருந்து தேர்ந்து எடுக்க பட்ட 75 மாணவர்கள் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர். நிறைவாக பேராசிரியர் சுகிர்தா நன்றி கூறினார். இயற்பியல் துறை மாணவர்கள் பயிலரங்க நிகழ்ச்சியை சிறப்பாக வழி நடத்தியது பாராட்டுக்குரியது.



■ திருப்பூர் மாவட்டம் சிகரம் தொடுவோம் அறக்கட்டளை நிர்வாகி ராதகிருஷ்ணன், நர்மதா தம்பதியின் தவப்புதல்வி தீக் ஷா வின் பிறந்த நாள் விழா. திருப்பூர் மாவட்டம் முத்தனம் பாளையம் பாலாஜி நகரில் சிகரம் தொடுவோம் அறக்கட்டளையின் நிறுவனர் அன்பு, தலைவர் மருதுபாண்டியன், செயலாளர் வெள்ளைசாமி, முன்னிலையில் கேக் வெட்டி.மாற்றுத்திறனாளிகள் ஐம்பதுக்கு மேற்பட்டவர்களுக்கு உணவு வழங்கப்பட்டது இதில் நிர்வாகிகள் கலந்து கொண்டனர் இதில் பேசிய நிறுவனர் அன்பு அவர்கள் இதுபோன்று தங்களது குழந்தைகளின் பிறந்த நாட்களில் அருகில் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு உணவு மற்றும் தேவையான பொருட்களை வழங்குவதன் மூலம் பிறவியின் பலனை அடைவோம் என தெரிவித்தார் ..

## “இன்றைக்கு ஆட்சியாளர்கள்தான் வாக்காளர்களை தேர்வு செய்கின்றனர்” -எஸ்ஐஆர் குறித்து சீமான் சீற்றம்

திருச்சி, டிச.21-

“அன்றைக்கு வாக்காளர்கள் ஆட்சியாளர்களை தேர்வு செய்தனர். இன்றைக்கு ஆட்சியாளர்கள் தங்களுக்கான வாக்காளர்களை தேர்வு செய்யும் நிலை உள்ளது.” என நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்தார்.

நாம் தமிழர் கட்சியின் இளைஞர் பாசறை மாநில கலந்தாய்வுக் கூட்டம் திருச்சி தனியார் மண்டபத்தில் இன்று நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் பங்கேற்க வந்த நாதக தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் செய்தியாளர்களிடம் கூறியது: சிறப்புத் தீவிரத் திருத்தம் என்று 1 கோடி வாக்காளர்களை நீக்கி உள்ளனர். பிழையைத் திருத்தாமல் மொத்தமாக அடித்துவிட்டு எழுதியதை எப்படி ஏற்க முடியும். 2 மாதங்களில் விடுபட்டவர்களை எப்படி சேர்க்க முடியும். நாட்டு மக்களின் கடைசி மதிப்பு மிக்க உரிமையே இந்த வாக்கு தான். அதைக் காப்பாற்றவே பெரும் போராட்டமாக இருக்கிறது.

பிஹாரில் பாஜக தங்களுக்கு வராத 81 லட்சம் வாக்குகளை நீக்கியது. இரட்டைப் பதிவு, உயிரிழந்தவர்களை நீக்குவதை விட்டுவிட்டு மொத்தமாகவே நீக்கினால் எப்படி?. தன் குடிகளுக்கு கொடுக்க வேண்டிய மதிப்புமிக்க வாக்கு உரிமையையே பாதுகாத்து வழங்க முடியாத அரசு அதிகாரத்தின் பொறுப்பற்ற செயலையை இந்த எஸ்ஐஆர் பணிகள் காட்டுகிறது.



அன்றைக்கு வாக்காளர்கள் ஆட்சியாளர்களை தேர்வு செய்தனர். இன்றைக்கு ஆட்சியாளர்கள் தங்களுக்கான வாக்காளர்களை தேர்வு செய்யும் நிலை உள்ளது. இது கொடுமையானது.

‘களத்தில் இருப்பவர்களை பற்றி பேசுவோம்’ என ஈரோட்டில் பேசிய விஜய், விக்கிரவாண்டி, ஈரோடு கிழக்கு இடைத்தேர்தல்களில் ஏன் போட்டியிடவில்லை?. பெரியார் பிறந்த ஊரில் நிற்க வேண்டியது தானே. திமுகவும், நாதகவும் தான் ஈரோடு கிழக்கில் மோதியது. களத்துக்கே வராதவர் களத்தைப் பற்றி பேசுவது நகைச்சுவை. அவர் பேசுவதை ரசித்து, சிரித்துவிட்டு போய்விட வேண்டும்.

விஜய், ‘ஈரோடு கடப்பாறை’ என்று யாரை சொல்கிறார் என்று உங்களுக்குத் தெரியாதா? அதெல்லாம் துருப்பிடித்து பழைய இரும்பு, பாத்திரங்கள் பேரீட்சம் பழத்துக்கு போட்டாச்சு.

அதிகாரத்தில் உள்ள கட்சிகள் தான் பணம் தருகின்றன. பாஜக பிஹாரில் குடும்பத் தலைவிகளுக்கு ரூ.10 ஆயிரம் வங்கிக் கணக்கில் போட்டது. உத்தரப்பிரதேசத்தில் பணம் கொடுத்து. தேர்தல் ஆணையம் அதை தடுத்ததா?

இங்கு வாக்கை வாங்கிக் கொள்ளும் முறை இருக்கும்போது மக்களுக்கான சேவை என்ற எண்ணம் செத்துவிடும். தொகுதி ரூ.50 கோடி என விலை கொடுத்து வாங்கும் நிலை இருக்கும் வரை பணநாயகம் தான் இருக்கும். ஜனநாயகம் இருக்காது. வாக்குக்கு பணம் கொடுப்பவர்கள் தேர்தலில் போட்டியிட 10 ஆண்டுகள் தடை என்று இருந்தால் வாக்குக்கு பணம் கொடுப்பது ஒழிந்து விடும்.

ஒரு நாடு 100 சதவீதமும் தனியார்மயத்தை சார்ந்து இருந்ததால் வந்த விளைவு. இண்டிகோ விமான நிறுவனம் விமானங்களை ரத்து செய்தது. தனி முதலாளியின் வளர்ச்சியை நாட்டின் வளர்ச்சி என்று கட்டமைக்கின்றனர்.

முதல்வர் ஸ்டாலினின் கொளத்தூர் தொகுதியில் 9,000 கள்ள வாக்குகள் பதிவாகியிருப்பதாக கூறும் அனுராக் தாக்கூர், அவர் பெற்ற வெற்றி செல்லாது என்று அறிவிப்பாரா?. 200 தொகுதியை வாங்கிவிடுவோம் என்பதை தான் 200 தொகுதியில் வெற்றி பெறுவோம் என்று உதயநிதி கூறுகிறார்.

மகளிர் உரிமை உள்ளிட்ட பல திட்டங்களில் ரூ.1,000 பணம் கொடுக்கும் அரசு அந்தப் பணத்தை எதிலிருந்து எடுக்கிறது?. சொத்துவரி, மின்கட்டணம் உயர்த்திவிட்டது. அரசு தந்த ரூ.1,000 வாங்கி ஆடு, மாடு வாங்கினேன் ஒரு பெண் பேசுகிறார். பொய்யையே புலமை மாதிரி பாடக்கூடாது.

பெண் உரிமை, கல்விக்காக பெரியார் போராடினார் என்று சொல்லும் உங்களை நினைத்து பரிதாபப்படுகிறேன். தேர்தல் வரும்போதும் தீயசக்திகள், தூய சக்திகளாகிவிடும். விஜய் முன்பு தீயசக்திக்கு ஏன் ஓட்டு போட்டார்?

அண்ணா, எம்ஜிஆர் கொள்கைக்கு ஓட்டு போடுவதில்லை. நீங்கள் கொடுக்கும் நோட்டுக்குத் தான் ஓட்டு. அப்படிப் பார்த்தால் காந்திக்கு தான் ஓட்டு.

திருப்பரங்குன்றம் தீபத்தூணில் விளக்கு ஏற்ற வேண்டி ஒருவர் தற்கொலை செய்தது அறிவார்ந்தது கிடையாது. மதங்களைத் தாண்டி மனிதம் தான் புனிதமானது. இவ்வாறு அவர் கூறினார்.

கருப்பு, சிவப்பு ஆடையில் வந்துருக்கீங்களே எதாவது குறியீடா? எனக் கேட்டபோது, ‘200 தொகுதியில் ஜெயிக்கணும்ல’ என தனது டிரேட் மார்க் சிரிப்பால் அதிரச்செய்தார்.

# "100 நாள் வேலை திட்டத்தை புல்டோசரால் இடித்து தள்ளியது மோடி அரசு" - சோனியா காந்தி



புதுடெல்லி, டிச.21- மகாத்மா காந்தி பெயரிலான 100 நாள் வேலைத் திட்டத்தை மோடி அரசு புல்டோசர் கொண்டு இடித்து தள்ளிவிட்டது என்றும், புதிதாகக் கொண்டு வரப்பட்டிருப்பது ஒரு கறுப்புச் சட்டம் என்றும் காங்கிரஸ் முத்த தலைவர் சோனியா காந்தி விமர்சித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள வீடியோவில், "இருபது ஆண்டுகளுக்கு முன்பு டாக்டர் மன்மோகன் சிங் பிரதமராக இருந்தபோது MNREGA சட்டம் நாடாளு மன்றத்தில் ஒருமனதாக நிறைவேற் றப்பட்டது எனக்கு இன்னும் நினைவில் நிற்கிறது. இது கோடிக் கணக்கான கிராமப்புற குடும்பங்களுக்கு பயனளித்த ஒரு புரட்சிகர நடவடிக்கை. குறிப்பாக, தாழ்த்தப்பட்ட, சுரண்டப்பட்ட, ஏழை மக்களுக்கு வாழ்வாதாரமாக மாறியது.

வேலைக்காக ஒருவர் தனது நாட்டில் இருந்தும், கிராமத்தில் இருந்தும், குடும்பத்தில் இருந்தும் இடம்பெயர்வது இத்திட்டத்தால் நிறுத்தப்பட்டது. வேலைவாய்ப்புக்கான சட்டப்பூர்வ உரிமைகள் வழங்கப்பட்டன. கிராம பஞ்சாயத்துக்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. மகாத்மா காந்தியின் கனவான கிராம சுயராஜ் ஜியத்தை நோக்கிய ஒரு உறுதியான நடவடிக்கையாக MNREGA இருந்தது.

கடந்த 11 ஆண்டுகளாக மோடி அரசாங்கம், கிராமப்புற வேலையற்றோர், ஏழைகள் மற்றும் வறியவர் களின் நலன்களை புறக்கணித்துள்ளது. கோவிட் பெருந்தொற்றுக் காலத்தில் ஏழைகளுக்கு உயிர்நாடியாக இருந்த திட்டம் விழிஸிணிநிகி என்பது நிரூபணம் ஆன போதிலும் அத்திட்டத்தை பலவீனப்படுத்த அனைத்து முயற்சிகளையும் மோடி அரசு மேற்கொண்டது.

இந்நிலையில், தற்போது MNREGA திட்டத்தையே மத்திய அரசு புல்டோசர் கொண்டு இடித்து தள்ளியது மிகவும் வருந்தத்தக்கது. மகாத்மா காந்தியின் பெயர் நீக்கப்பட்டது மட்டுமல்ல லாமல், விழிஸிணிநிகி திட்டத்தின் வடிவமைப்பையே விவாதம் இல்லாமல், ஆலோசனை இல்லாமல், எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பை கணக்கில் கொள்ளாமல் தன்னிச்சையாக மாற்றி விட்டது. இனி, யாருக்கு வேலை வாய்ப்பு, எவ்வளவு, எங்கே, என்ன வகையான வேலைவாய்ப்பு என்பதை டெல்லியில் அமர்ந்திருக்கும் அரசு முடிவு செய்யும்.

MNREGA திட்டத்தை அறிமுகப்படுத்துவதிலும் செயல்படுத்துவதிலும் காங்கிரஸ் முக்கிய பங்கு வகித்தது. எனினும், இது ஒருபோதும் கட்சி தொடர்பான விஷயமாக இருக்கவில்லை. இது தேசிய நலன் மற்றும் பொது நலனுக்கான ஒரு திட்டமாகவே இருந்தது. இந்த சட்டத்தை பலவீனப்படுத்துவதன் மூலம் மோடி அரசாங்கம் கோடிக்கணக்கான விவசாயிகள், தொழிலாளர்கள் மற்றும் நிலமற்ற கிராமப்புற ஏழைகளின் நலன்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளது.

இந்த தாக்குதலை எதிர்கொள்ள நாம் அனைவரும் தயாராக இருக்க வேண்டும். 20 ஆண்டுகளுக்கு முன்பு, நானும் என் ஏழை சகோதர சகோதரிகளின் வேலைவாய்ப்பு உரிமை களுக்காகப் போராடினேன். இன்றும்கூட இந்த கறுப்புச் சட்டத்துக்கு எதிராக போராட நான் உறுதிபூண்டுள்ளேன்" என சோனியா காந்தி தெரிவித்துள்ளார்.

# திண்டுக்கல் மாவட்டத்திற்கு முதல்வர் ஸ்டாலின் வருகை : விழா நடைபெறும் இடங்களை அமைச்சர் ஐ.பெரியசாமி அதிகாரிகள் ஆய்வு



சின்னாளபட்டி, டிச.21

திண்டுக்கல் மாவட்டத்திற்கு வருகின்ற டிசம்பர் 7ம் தேதி தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வருகை தந்து டிசம்பர் 7, 8 ஆகிய இரு நாட்களில் திண்டுக்கல் மாவட்டத்தில் முடிவுற்ற நலத்திட்டப் பணிகளை தொடங்கி வைக்கவும், புதிதாக நலத்திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டவும் உள்ளார். இது தவிர தமிழகத்தில் மிக பிரமாண்டான முறையில் கட்டப்பட்ட ஆத்தூர் கலைஞர் நூற்றாண்டு விழா கலை மற்றும் அறிவியல் கல்லூரியையும், இது தவிர பேரூராட்சி பகுதிகளில் கட்டப்பட்ட புதிய பேருந்து நிலையங்கள், மற்றும் அரசு கட்டிடங்களை திறந்து வைக்க உள்ளார். இது தவிர திண்டுக்கல் மாவட்டத்திற்கு பெருமை சேர்க்கும் விதமாக வைகை அணையிலிருந்து சுமார் ரூ. 700 கோடி மதிப்பில் குடி தண்ணீர் கொண்டுவரும் திட்டத்தையும், தொடங்கி வைப்பதாக கூறப்படுகிறது.

வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணி அளவில் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களின் தலைமையில், அமைச்சர் அர.சக்கரபாணி, மாவட்ட ஆட்சியர் சரவணன், பழனி சட்டமன்ற தொகுதி திமுக உறுப்பினருமான ஐ.பி.செந்தில்குமார் ஆகியோர் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்து கொள்ளும் விழா மேடை மற்றும் செல்லும் பாதை, பயனாளிகள் அமரும் இடம், விழா மேடை அமையும் இடம், வாகனங்கள் நிறுத்துமிடம் ஆகியவற்றை பார்வையிட்டு, ஆய்வு செய்து அதிகாரிகளுக்கு ஆலோசனைகளை வழங்கினார்கள். நிகழ்ச்சியின்போது மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பிரதீப்குமார், மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயபாரதி, வருவாய் கோட்டாட்சியர் திருமலை, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் பெ.திலகவதி, திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், கிழக்கு மாவட்ட திமுக பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, தாசில்தார் சுல்தான் சிக்கந்தர், அகரம் பேரூராட்சி மன்ற தலைவர் நந்தகோபால், மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர் விடுதலை முருகன், திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர் நெல்லை சுபாஷ் உட்பட திமுக நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.

# சின்னாளபட்டி பேரூராட்சியில் நெகிழி கழிவு குறித்த விழிப்புணர்வு இயக்கம் உறுதிமொழி




சின்னாளபட்டி, டிச.21

திண்டுக்கல் மாவட்டம் சின்னாளபட்டி சிறப்புநிலை பேரூராட்சிக்கு உட்பட்ட 18 வார்டுகளில் மாபெரும் நெகிழி சேகரிப்பு இயக்கம் சார்பாக நெகிழி கழிவுகளை அகற்றுதல் மற்றும் பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தி மீண்டும் மஞ்சப்பை பயன்படுத்தும் விதமாக அறிவுறுத்தப்பட்டது. பேரூராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற மாபெரும் நெகிழிவு கழிவு சேகரிப்பு இயக்கம் சார்பாக நடைபெற்ற நிகழ்ச்சிக்கு பேரூராட்சிமன்ற தலைவர் பிரதீபா கனகராஜ் தலைமை தாங்கினார். செயல்அலுவலர் இளவரசி, மாசுக்கட்டுப்பாடு வாரிய உதவி பொறியாளர் ஆர்.தாரணி ஆகியோர் முன்னிலை வகித்தனர். பேரூராட்சி துப்புரவு அலுவலர் மணிகண்டன் வரவேற்றார். பேரூராட்சி அலுவலகம் முன்பு நடைபெற்ற உறுதிமொழி எடுத்தனர். முன்னதாக துப்புரவு அலுவலர் மணிகண்டன் கலந்துகொண்ட அனைவருக்கும் மஞ்சள் பை வழங்கினார். பேரூராட்சி தலைமை எழுத்தர் முத்துராம், துப்புரவு மேற்பார்வையாளர்கள் சரளா, அகிலன், கணக்காளர்கள் ராமமூர்த்தி, கலைச்செல்வி, உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# ஆட்சிக்கு வந்து 5 ஆண்டுகள் முடியும் நேரத்திலும் வாக்குறுதியை நிறைவேற்றாத திமுக அரசு: அண்ணாமலை விமர்சனம்



சென்னை, டிச.21- ஆட்சிக்கு வந்து 5 ஆண்டுகள் முடியும் நேரத்திலும் திமுக அரசு, கொடுத்த வாக்குறுதியை இன்னும் நிறைவேற்றவில்லை என பாஜக முன்னாள் மாநில தலைவர் அண்ணாமலை விமர்சித்துள்ளார்.

இதுகுறித்து தனது எக்ஸ் தளபதிவில் அண்ணாமலை கூறியிருப்பதாவது: பணி நிரந்தரம் கோரி, போராட்டம் நடத்திய 1,500க்கும் மேற்பட்ட செவிலியர்களை, கைது செய்து, நள்ளிரவில் கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தில் கொண்டு போய் விட்டிருக்கிறது திமுக அரசு.

இதனால், அதிகாலை நான்கு மணி வரை, கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தில், செவிலியர்கள் தங்கள் போராட்டத்தைத் தொடர்ந்திருக்கிறார்கள். திமுக அரசின் இந்த அராஜகப் போக்கினை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

திமுக தனது தேர்தல் அறிக்கை வாக்குறுதி எண் 356ல், தமிழகம் முழுவதும் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் மருத்துவர்களும், செவிலியர்களும், பணி நிரந்தரம் செய்யப்படுவார்கள் என்று கூறியிருந்தது. ஆட்சிக்கு வந்து 5 ஆண்டு முடியப் போகும் நேரத்திலும், இந்த வாக்குறுதியை நிறைவேற்ற எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

கரோனா காலத்தில், தங்கள்உயிரை பற்றிக் கூடக் கவலைப்படாமல், பொதுமக்கள் நலனுக்காக முன்னின்று பணியாற்றியவர்கள் மருத்துவர்களும், செவிலியர்களும்தான். ஏற்கெனவே, 2023ம் ஆண்டு, ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றிய 2,472 செவிலியர்களை பணிநீக்கம் செய்ததை கண்டித்துக் குரல் கொடுத்திருந்தோம்.

தமிழகம் முழுவதும் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றும் செவிலியர்களைப் பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என்ற செவிலியர்களின் கோரிக்கைக்கு துணை நிற்போம். செவிலியர்களுக்குக் கொடுத்த தேர்தல் வாக்குறுதியை திமுக நிறைவேற்ற வேண்டும் என்று வலியுறுத்துகிறோம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



# ஐயோ பாவம்... ஈரோடு விஜய் பிரசாரம் குறித்த கேள்விக்கு நயினார் நாகேந்திரன்

தவெக தலைவர் விஜய் பேச்சுக்கு பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் கருத்து தெரிவித்துள்ளார். ஐயோ பாவம் தவிர விஜய்க்கு வேறு என்ன சொல்ல முடியும். விஜய் இதுவரை எந்த தேர்தலிலும் போட்டியிடவில்லை. இப்போது எங்கள் அண்ணன் (செங்கோட்டையன்) ஒருத்தர் தவெகவில் இணைந்திருக்கிறார். அவர் சேர்ந்ததனால், ஏதோ அம்மா உடன் இருப்பதுபோல் நினைத்து ஏதோ செய்துக்கொண்டிருக்கிறார்.செங்கோட்டையன் அண்ணன் பாவம். அவருக்கு வேறு வழியில்லை. திமுக எப்போதுமே மக்கள் செல்வாக்கோடு ஜெயித்தது கிடையாது. 1967க்குப் பிறகு எம்ஜிஆர் உயிருடன் இருக்கும் வரை அவர் தான் முதலமைச்சராக இருந்தார். அதன்பிறகு, கட்சி உடைந்ததனால் திமுக ஆட்சிக்கு வந்தது.கடந்த முறைகூட ஏதோ கணக்கு தவறினால் திமுக ஆட்சிக்கு வந்தது. அதனால் இன்று 50 ஆயிரம் கோடிக்கு மேல் பணத்தை கொள்ளையடித்துள்ளனர்.இவ்வாறு அவர் கூறினார்.




# கோவை சாரதாம்பாள் கோயிலில் டிச.21ல் 'கீதாம்ருதம்'

கோவை, டிச.21- சமஸ்கிருத பாரதி அமைப்பு சார்பில், கோவை பந்தய சாலை பகுதியில் உள்ள சாரதாம்பாள் கோயிலில் 'கீதாம்ருதம்' நிகழ்ச்சி நாளை (ஞாயிற்றுகிழமை) நடக்கிறது.

இதுகுறித்து சமஸ்கிருத பாரதி(தென் தமிழ்நாடு) மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஸ்ரீநிவாசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: கீதா ஜெயந்தி விழா தொடர்பாக சம்ஸ்கிருத பாரதி கோவை 'கீதாம்ருதம்' என்ற விழா நாளை டிசம்பர் 21(ஞாயிறு) காலை 9 மணி முதல் மதியம் 1 மணி வரை கோவை பந்தய சாலை பகுதியில் அமைந்துள்ள சாரதாம்பாள் கோயில் மண்டபத்தில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பகவத் கீதையின் அனைத்து 18 அத்தியாயங்களும் கூட்டு பாராயணம் செய்யப்படும். இதில் சமஸ்கிருத பாரதியின் காரியகர்த்தாக்கள், பத்ராசார வகுப்பு மாணவர்கள், மற்ற பள்ளி மாணவர்கள் உள்பட பொதுமக்களும் கலந்து கொள்கின்றனர்.

மேலும் அஞ்சல் வழி சமஸ்கிருதம் பயிலுதல் வகுப்புகள் மற்றும் இலவச பேச்சு பயிற்சி வகுப்புகளுக்கு புதிய மாணவர்கள் சேர்க்கை, சமஸ்கிருத புத்தகங்களின் விற்பனை நடைபெறும். அனைவரும் விழாவில் கலந்து கொண்டு பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் அருளுக்கு பாத்திரம் ஆக கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும் விவரங்களுக்கு 94437 22006, 94892 81557, 94873 41306 ஆகிய எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர் மாவட்டங்களில் 15.95 லட்சம் வாக்காளர்கள் நீக்கம்

காஞ்சி/ செங்கை/ திருவள்ளூர், டிச.21- காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர் மாவட்டங்களில் வரைவு வாக்காளர் பட்டியல் நேற்று வெளியிடப்பட்டது. இதன்படி, இந்த மாவட்டங்களில் 15,95,922 வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ளனர்.காஞ்சிபுரம் மாவட்ட வரைவு வாக்காளர் பட்டியலை மாவட்ட ஆட்சியர் கலைச்செல்வி, அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் முன்னிலையில் நேற்று வெளியிட்டார். இதன்படி, மாவட்டத்தில் உள்ள ஆலந்தூர், ஸ்ரீபெரும்புதூர் (தனி), உத்திரமேரூர், காஞ்சிபுரம் ஆகிய 4 சட்டப்பேரவைத் தொகுதிகள் மொத்தம் 11 லட்சத்து 26 ஆயிரத்து 924 வாக்காளர்கள் உள்ளனர். இவர்களில் ஆண்கள் 5,47,393 பேர், பெண்கள் 5,79,346 பேர், மூன்றாம் பாலினத்தவர் 185 பேர். மாவட்டம் முழுவதும் 2,74,274 வாக்காளர்கள் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன.அதிகபட்சமாக ஆலந்தூர் தொகுதியில் 1.32 லட்சம் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன. வாக்காளர் வசதிக்காக புதிதாக 144 வாக்குச்சாவடிகள் உருவாக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் மாவட்டத்தில் மொத்த வாக்குச்சாவடிகளின் எண்ணிக்கை 1,401லிருந்து 1,545ஆக உயர்ந்துள்ளது.

செங்கல்பட்டு மாவட்டத்துக்கான வரைவு வாக்காளர் பட்டியலை மாவட்ட ஆட்சியர் தி.சினேகா வெளியிட்டார். இதன்படி, சோழிங்கநல்லூர், பல்லாவரம், தாம்பரம், செங்கல்பட்டு, திருப்போரூர், செய்யூர், மதுராந்தகம் ஆகிய 7 சட்டப்பேரவைத் தொகுதிகளில் மொத்தம் 20 லட்சத்து 85 ஆயிரத்து 491 வாக்காளர்கள் உள்ளனர்.

இவர்களில் ஆண்கள் 10,22,756 பேர், பெண்கள் 10,62,381 பேர், மூன்றாம் பாலினத்தவர் 354 பேர். வாக்காளர் பட்டியலில் இருந்து மொத்தம் 7 லட்சத்து 1,871 வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன. திருவள்ளூர் மாவட்டத்துக்கான வரைவு வாக்காளர் பட்டியலை ஆட்சியர் மு.பிரதாப் வெளியிட்டார். மொத்தம் 6,19,777 வாக்காளர்களின் பெயர்கள் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளன. அதிகபட்சமாக மாதவரம் தொகுதியில் 1,09,499 பெயர்களும், மதுரவாயல் தொகுதியில் 1,17,368 பெயர்களும் நீக்கப்பட்டுள்ளன. ஒட்டுமொத்தமாக மாவட்டத்தில் தற்போது 29,62,449 வாக்காளர்கள் உள்ளனர்.

# திருவொற்றியூர், மணலி பகுதிகளில் குடிநீர் விநியோகம் டிச.22ம் தேதி தற்காலிக நிறுத்தம்



சென்னை, டிச.21- நீருந்து நிலைய பிரதான குடிநீர் குழாய் மாற்றும் பணி காரணமாக வரும் 22ம் தேதி காலை 10 மணி முதல் 24ம் தேதி காலை 10 மணி வரை திருவொற்றியூர், மணலி பகுதியில் குடிநீர் விநியோகம் தற்காலிகமாக நிறுத்தப்படும்.

இது தொடர்பாக சென்னை குடிநீர் வாரியம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: மணலி காமராஜர் சாலையில் அமைந்துள்ள திருவொற்றியூர் நீருந்து நிலையத்தில் பிரதான குடிநீர் குழாயை மாற்றி அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட உள்ளதால் 22ம் தேதி (திங்கள்) காலை 10 மணி முதல் 24ம் தேதி வரை காலை 10 மணி வரை அந்த நீருந்து நிலையமும், மணலி நீருந்து நிலையமும் தற்காலிகமாக செயல்படாது.

திருவொற்றியூர், மணலி மண்டலங்களுக்கு உட்பட்ட கத்திவாக்கம், எண்ணூர், திருவொற்றியூர், காலடிப்பேட்டை, சடையன்குப்பம் ஆகிய பகுதிகளுக்கு குழாய்கள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் தற்காலிகமாக நிறுத்தப்படுகிறது.

எனவே, பொதுமக்கள் முன்னெச்சரிக்கையாக வேண்டிய அளவு குடிநீரை சேமித்து வைத்துக்கொள்ள வேண்டும். அவசர தேவைகளுக்கு லாரிகள் மூலம் குடிநீர் பெற சென்னை குடிநீர் வாரியத்தின் இணையதளத்தில் பதிவு செய்து பெறலாம். இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# விஜய்யின் அடுத்த மக்கள் சந்திப்பு எங்கே? செங்கோட்டையன் தகவல்



கோவை, டிச.21- விஜய்யின் அடுத்த மக்கள் சந்திப்பு குறித்து இன்று மாலை விஜய்யுடன் ஆலோசனை நடத்தவிருப்பதாக, தவெக நிர்வாக குழு தலைமை ஒருங்கிணைப்பாளர் செங்கோட்டையன் தெரிவித்துள்ளார். மேலும், அரசியல் களத்தில் இருக்கின்றோமா, இல்லையா என்பதற்கு தேர்தல் முடிவுகள்தான் தீர்ப்பளிக்கும் என பாஜகவுக்கு அவர் பதிலடியும் கொடுத்துள்ளார்.

கோவை விமான நிலையத்தில் தமிழக வெற்றிக்கழக நிர்வாக குழு தலைமை ஒருங்கிணைப்பாளர் செங்கோட்டையன் செய்தியாளர்களிடம் கூறியதாவது: எஸ்.ஜ.ஆர் குறித்து தவெக தலைவர் விஜய் அறிக்கை வெளியிட்டிருக்கிறார். அதுவே பொருத்தமானதாக இருக்கும்.

ஈரோட்டில் நடந்த பொதுகூட்டத்துக்குப் பின்னர், ஒவ்வொரு அரசியல் கட்சியினரும் ஒரு கருத்தை சொல்கின்றனர், அதுபோல அமைச்சர் சேகர்பாபு, எங்களை தவழும் குழந்தை என்று சொல்லி இருக்கிறார். தவழும் குழந்தைதான் பெரியவர் ஆவார்கள். பெரியவர் ஆனதற்கு அப்புறம் தான் தன்னுடைய தன்னாட்சி நடத்துவார்கள்.

தமிழக வெற்றி கழகம் களத்தில் இல்லாத கட்சி என பாஜக மூத்த தலைவர் தமிழிசை சவுந்திர ராஜன் தெரிவித்து இருப்பது அவருடைய கருத்து. களத்தில் இருக்கின் றோமா, இல்லையா, என்பதற்கு தேர்தல் முடிவுகள்தான் தீர்ப்பளிக்கும்.

தவெகவின் அடுத்த பொது கூட்டம் குறித்த கேள்விக்கு, இன்று மாலை விஜய் உடன் பேசிவிட்டு எந்த இடம் என்பதை முடிவு செய்வோம்.

எங்களைப் பொறுத்த வரையிலும் பொங்கல் பண்டிகை முடிந்த பிறகு, எங்கள் திருப்புமுனை எப்படி அமைந்து இருக்கிறது என நாடே வியக்கும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.



■ நெல்லை மாவட்டம் வள்ளியூர் பேருந்து நிலையம் விரைவில் திறக்க வலியுறுத்தி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சேர்ந்த 50க்கும் மேற்பட்டோர் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். மறியலில் ஈடுபட்டவர்களை போலீசார் கைது செய்தனர்.



■ மதுரை மேற்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பரவை தனியார் திருமண மண்டபத்தில் பொதுமக்கள் சிறப்பு குறைதீர்க்கும் முகாமில் மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி மனுக்களை பெற்றுக் கொண்டார். மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே. பிரவீன்குமார் மாநகராட்சி ஆணையாளர் சித்ராவிஜயன் சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன் மாவட்ட வருவாய் அலுவலர் அன்பழகன் ஆகியோர் உடன் உள்ளனர்/




# வி.எஸ்.ஆர் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் கிறிஸ்துமஸ் விழா

வி.எஸ்.ஆர் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் (19.12.25) வெள்ளியன்று கிறிஸ்மஸ் விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது இதில் பள்ளியின் தாளாளர் வி எஸ் ஆர் ஜெகதீஷ் அவர்கள் இயக்குனர் சௌமியா ஜெகதீஷ் அவர்களும் முன்னிலை வகித்தனர் மற்றும் பள்ளியின் துணை தலைமை ஆசிரியர் விஜயா தினகரன் தலைமை தாங்கினார் அருள் தந்தை K.செல்வராயர் புனித அந்தோனியார் நடுநிலைப்பள்ளி மற்றும் லூகாஸ் தொடக்கப்பள்ளியின் தாளாளர் அவர்கள் சிறப்பு விருந்தினராக விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர். நிகழ்ச்சியின் தொடக்கமாக துணை முதல்வர் விஜயா தினகரன் வரவேற்புரை வழங்கினார். தொடர்ந்து மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது நிகழ்ச்சியின் சிறப்பு செய்தியாக கிறிஸ்துவின் பிறப்பை மழலை செல்வங்கள் அழகாக நடித்து காண்பித்தனர். மாணவி பதுவா கிறிஸ்துவின் பிறப்பை குறித்து பேசினார்.

அதனைத் தொடர்ந்து 11ம் வகுப்பு மாணவர்கள் ஜினோசன் மற்றும் விஜின் கிறிஸ்மஸ் தாத்தா வேடமணிந்து மாணவர்களுக்கு இனிப்புகளும் பரிசுகளும் வழங்கி நடனமாடி விழாவினை கலகலப்பாக்கினார். சிறப்பு விருந்தினர் மாணவர்களுக்கு கிறிஸ்து பிறப்பின் வரலாற்றை கூறி மேலும் கிறிஸ்துமஸ் விழா என்பது ஏழை எளிய மக்களுக்கு கொடுத்து உதவுவதே மகிழ்ச்சியை தரும் என்ற உயர்ந்த கருத்தை எடுத்துக் கூறி சிறப்புரை ஆற்றினார்.

பள்ளியின் தாளாளர் வி எஸ் ஆர் ஜெகதீஷ் அவர்கள் கிறிஸ்துமஸ் என்பது அன்பு, சமாதானம், மகிழ்ச்சி, நம்பிக்கை ஆகியவற்றை வெளிப்படுத்தும் விழா என்று கூறி வாழ்த்துகளை தெரிவித்தார். தொடர்ந்து பள்ளியில் கிறிஸ்மஸ் விழாவை ஒட்டி நடைபெற்ற போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சிறப்பு விருந்தினர் பரிசுகளை வழங்கி கிறிஸ்மஸ் வாழ்த்துகளை தெரிவித்தார் துணை முதல்வர் நன்றியுரை வழங்கி கிறிஸ்மஸ் வாழ்த்துகளை தெரிவித்தார்.



# திசையன்விளை கரைச்சுத்துப்புதூர் பள்ளி கிறிஸ்துமஸ் விழாவில் முன்னாள் எம்.பி. சௌந்தரராஜன் பரிசுகள் வழங்கினார்


திசையன்விளை, டிச.20-

நெல்லை மாவட்டம் திசையன்விளை அருகே உள்ள கரைச்சுத்துப்புதூர் டிடிடிஏ நடுநிலை பள்ளியில் கிறிஸ்துமஸ் விழா கொண்டாடப்பட்டது.சிறப்பு விருந்தினராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சௌந்தரராஜன் கலந்து கொண்டார்.பள்ளியின் பொறுப்பு தலைமை ஆசிரியை எபனேசர் வரவேற்று பேசி நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். ராதாபுரம் கிழக்கு ஒன்றிய அதிமுக செயலாளர் கேபிகே.செல்வராஜ் சிறப்பு விருந்தினரை அறிமுகம் செய்து வரவேற்றார்.

திருநெல்வேலி திருமண்டல துணை தலைவர் சுவாமி தாஸ், கிறிஸ்துமஸ் கேக் வெட்டி விழாவை தொடங்கி வைத்தார். விழாவில் மாணவ மாணவிகள் நடனம், ஆசிரியைகள் பெற்றோர்களின் கிறிஸ்துமஸ் பாடல்கள் ஆகியவை நடந்தது. மாணவர்கள் கிறிஸ்துமஸ் தாத்தா வேடமிட்டு நடனமாடினார். சிறப்பு விருந்தினர் சௌந்தரராஜன் ஆசிரியர்கள் மாணவர்கள் பெற்றோர்களுக்கு கிறிஸ்துமஸ் பரிசு கள் வழங்கி கிறிஸ்துமஸ் வாழ்த்துக்கள் கூறினார். கரைச்சுத்துப்புதூர் சேகர குரு ஆசீர்வாதம் டேவிட் ஆசீர்வாத ஜெபம் செய்தார். கேபிகே செல்வராஜ் நிகழ்ச்சி முடிவில் நன்றி கூறினார். விழாவில் சேகர குருமார்கள் சாமுவேல் பிரகாஷ், வேதநாயகம்,சில்வான்ஸ் சௌந்தர பாண்டியன், ஆல்வின் பிரைட், ஜெயசிங் ஆபிரகாம்,பொன் ராபின் வினோ, ஏனோக் பாஸ்கர், கிருபாகரன், ராவிஜோசப், ராதாபுரம் மேற்கு ஒன்றிய அதிமுக செயலாளர் அந்தோணி அமலராஜா, அதிமுக பிரமுகர்கள் விினேஷ் ராஜா, செட்டிகுளம் வசந்தி, ராஜம், உவரி பவர் சிங், தொழிலதிபர் ஆண்ட்ரூஸ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.




■ தமிழ்நாடு அரசு அலுவலகம் ஒன்றியத்தின் ஏலகிரியில் மாநில அளவிலான முதல் நாள் பயிற்சி பட்டறையில் மாநில தலைவர் வெ.மகேந்திரகுமார், முன்னுரை வழங்கிய பொழுது அருகில் மாநில, மாவட்ட, மேனாண், மற்றும் இளைஞரணி, மகளிரணி, தகவல் தொழில்நுட்ப அணி, இலக்கிய அணி. நிர்வாகிகள் அனைவரும் பயிற்சி ஆசிரியர்களால் பயிற்சி பெற்றனர்.



■ ஈரோடு மாவட்டம் தாளவாடி கிராமம் தலைமலை தொட்டபுரத்தில் அமைந்துள்ள 46 அடி உயர அருள்மிகு ஸ்ரீ ருத்ர ஜெய வீர ஆஞ்சநேயர் திருக்கோவிலில் அனுமன் ஜெயந்தி முன்னிட்டு 46 அடி உயர ஆஞ்சநேயருக்கு துளசி மாலை மற்றும் வடை மாலை சூட்டப்பட்டு சிறப்பு பூஜை நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து ஆலயத்தில் அமைந்திருக்கும் ஆஞ்சநேயருக்கு வெண்ணை காப்பு அலங்காரம் செய்யப்பட்டு பிரம்மாண்ட காட்சியளித்தார். இந்த அனுமன் ஜெயந்தி விழாவிற்கு தமிழ்நாடு மட்டும் இன்றி கர்நாடக மாநிலத்தில் இருந்தும் ஏராளமானோர் வருகை புரிந்தனர்.



# திருப்பூர் ஸ்ரீ வீரராகவ பெருமாள் கோவிலில் வைகுண்ட ஏகாதசியை சிறப்பு நிகழ்ச்சிகள்

திருப்பூர், டிச.21-

இதில் ரா 10 பகல் 10 என்னும் நிகழ்ச்சி நடைபெறும் இந்நிகழ்ச்சியில் முதல் நாள் இரவு திருநெடும் தாண்டவம் என்னும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியை திருப்பூர் மாவட்ட முத்தரையர் ஒருங்கிணைப்பு குழு மற்றும் சுவரன் மாறன் கல்வி அறக்கட்டளை மற்றும் அனைத்து முத்திரையர் சமுதாய பொதுமக்கள் சார்பாக இந்த நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இதில் முத்தரையர் சமுதாய மக்கள் நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். மற்றும் அனைத்து சமுதாய பொது மக்களும் திரளாக கலந்து கொண்டனர் இறுதியாக வந்திருந்த அனைத்து மக்களுக்கும் முத்தரையர் ஒருங்கிணைப்பு குழு மற்றும் சுவரன் மாறன் கல்வி அறக்கட்டளை சார்பாக பிரசாதம் அன்னதானம் வழங்கப்பட்டது.



■ திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் தாலுகா கீழ்மலை கிராமமான, காமனூர் பகுதியில் போடியை சேர்ந்த செந்தில் பாண்டியன் என்பவர் மரங்களை வெட்டுவதற்காக சட்டத்திற்கு புறம்பான முறையில் ஜே.சி.பி இயந்திரங்களை கொண்டு அரசு நிலத்தில் சாலை அமைப்பதோடு, வெடி வைத்து பாறைகளை உடைத்தும், அனுமதி பெற்ற மரங்களை தாண்டி அனுமதி பெறாத மரங்களையும் வெட்டி கடத்துகிறார்கள் என்று பெரும்பாறையை சேர்ந்த தமிழ் வேந்தன் என்பவர் பொது நல வழக்கு தொடர்ந்த நிலையில், வரும் 2026 ஜனவரி மாதம் ஐந்தாம் தேதி திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் சரவணன் அறிக்கை சமர்ப்பிக்க, மதுரை உயர்நீதி மன்ற அமர்வு உத்தரவிட்டுள்ளது. மேலும் 2012 ஆண்டு சென்னை உயர் நீதிமன்ற உத்தரவின்படி மலைகள் மற்றும் கனிமவளம் பாதுகாப்பு சட்டத்தின்படி, வெடி வைப்பது, ஜே சி பி, பொக்லின், கம்பிரசர், போர்வெல் போன்ற கனரக வாகனங்கள் தடை செய்யப்பட்ட தீர்ப்பு இன்றும் நடைமுறையில் உள்ளது குறிப்பிடத்தக்கது. அரசு அதிகாரிகளே நீதிமன்ற தீர்ப்பை அவமதிப்பது வேதனை அளிக்கிறது இது என பொதுமக்களும், சமூக ஆர்வலர்களும் வேதனை தெரிவித்தனர்.

# “உதயநிதியை இளம் பெரியார் எனக் கூறியிருப்பது கஷ்டகாலம்” – முன்னாள் அமைச்சர் காமராஜ்

கும்பகோணம், டிச.21-

“துணை முதல்வர் உதயநிதியை இளம் பெரியார் என அமைச்சர் எ.வ.வேலு பேசியுள்ளது கஷ்டகாலம்” என அதிமுக முன்னாள் அமைச்சர் இரா. காமராஜ் தெரிவித்தார்.

கும்பகோணம் காந்தி பூங்கா அருகில் தஞ்சாவூர் அதிமுக கிழக்கு மாவட்டம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. கிழக்கு மாவட்டச் செயலாளர் பாரதிமோகன், மாநகரச் செயலாளர் ராமநாதன், மாநில கொள்கை பரப்புச் செயலாளர் சேகர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.




முன்னதாக அதிமுக மாநில அமைப்புச் செயலாளரும், எம்எல்ஏவுமான இரா.காமராஜ் கூறியது: கும்பகோணம் வட்டம், கருப்பூரில் 100க்கணக்கான ஏக்கர் நிலம் ஆளும்கட்சிக்கு சொந்தமாக இருக்கிறது. அந்த நிலத்தை ஊக்குவிப்பதற்காக எம்எல்ஏ 10.58 ஏக்கர் மற்றும் கோவை மாவட்டத்தைச் சேர்ந்த தனியார் ரியல் எஸ்டேட் நிறுவனம் 2.24 ஏக்கர் நிலத்தை தானமாக பேருந்து நிலையம் அமைக்க வழங்கியுள்ளனர்.

மையப்பகுதியில் இயங்கி வரும் பேருந்து நிலையத்தை, 7 கி.மீ. தூரம் உள்ள கருப்பூருக்கு இடமாற்ற வேண்டிய அவசியம் இல்லை. அங்கு இடமாற்றம் செய்தால், கும்பகோணத்துக்கு வரும் அனைவரும் அவதிக்குள்ளாவார்கள்.

மேலும், கமிஷனுக்காக மட்டுமில்லாமல், திமுகவினர், ரியல் எஸ்டேட் செய்வதற்கு அந்த நிலத்தின் தரத்தை உயர்த்துவதற்காக அங்கு பேருந்து நிலையத்தை இடமாற்றம் செய்ய உள்ளனர். காவிரி டெல்டா மாவட்டம் பாதுகாப்பட்ட வேளாண் மண்டலம். ஆனால் இங்கு நன்செய் நிலத்தில் பேருந்து நிலையம் அமைப்பதற்கான அவசியம் என்ன இருக்கிறது.

கருப்பூர் பகுதியில் 1 சதுரடி ரூ.150க்கு விற்பனை செய்யப்பட்டது. அங்கு பேருந்து நிலையம் வருவதற்கான ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு உள்ள நிலையில் தற்போது 1 சதுரடி ரூ.1500க்கு விற்பனை செய்யப்படுகிறது. மேலும், அங்கு 1 ஏக்கர் நிலம் ரூ. 1.50 கோடிக்கு விற்பனை செய்யப்படுகிறது.

இதுபோன்ற செயல்களாக பாதிக்க ப்படும் பொதுமக்களுக்காக அதிமுக குரல் கொடுக்கும். இதே போல், கருப்பூரில் பேருந்து நிலையம் இடமாற்றம் செய்வதற்கு 2024, டிச.30ல் மாமன்ற கூட்டத்தில் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. ஆனால் அப்போது ஏற்பட்ட பிரச்சினையால் அந்த தீர்மானம் நிறைவேறவில்லை. தற்போது தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக போர்ஜரியாக தீர்மானக் கோப்புகளை தயாரித்து அனைத்திலும் மோசம் செய்துள்ளனர். 2026ல் அதிமுக ஆட்சிக்கு வந்தவுடன், சட்டவிரோத செயலில் ஈடுபடுகின்ற நீங்கள் பதில் சொல்லியே ஆகவேண்டும்.

மேலும், தேர்தல் நேரங்களில் இங்கு இருக்கக் கூடிய பல பேர் இருக்க வேண்டிய இடம் வேறு. அந்த லிஸ்டில் இது போன்றவர்கள் இணைந்து கொண்டிருக்கின்றார்கள். இங்குள்ள அதிகாரிகள் இது போன்ற முறைகேட்டுக்கு துணை போகாதீர்கள். தமிழகத்தில் கொலை, கொள்ளை, பாலியல் துன்புறுத்தல், கஞ்சா விற்பனை ஆகியவற்றிற்கு முற்றுபுள்ளி வைக்க வேண்டும் என்றால் மீண்டும் அதிமுக ஆட்சி தமிழகத்தில் மலர வேண்டும். எனவே, பேருந்து நிலையத்தை இடமாற்றம் செய்வதை நிறுத்த வேண்டும். இல்லாவிட்டால் அதற்கான பலாபலனை நீங்கள் அடைந்தே தீர்வீர்கள் என்றார். தொடர்ந்து கண்டன முழக்கமிட்டனர்.

தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய அவர், “1992ம் ஆண்டு தற்போது உள்ள பேருந்து நிலையத்தை கட்டமைக்கும் போதே 1000 பேருந்துகள் வந்து செல்லும் வகையில் வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் இன்று 400 பேருந்துகள் தான் வந்து செல்கின்றன. ஆனால் வேறு இடத்துக்கு கொண்டு செல்வதற்கு முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

அமைச்சர் ஏ.வ.வேலு, துணை முதல்வர் உதயநிதியை இளம் பெரியார் என பேசியுள்ளார் என செய்தியாளர்கள் கேட்டதற்கு, இதெல்லாம் கஷ்டகாலம்.” என பதிலளித்து புறப்பட்டுச் சென்றார்.

# "நாங்கள் இருவரும் டெல்லி செல்வோம்" முதல்வர் சர்ச்சை குறித்து டி.கே.சிவகுமார் பேச்சு



பெங்களூரு, டிச.21-

"முதல்வர் மாற்ற விவகாரம் குறித்து விவாதிக்க டெல்லிக்கு அழைப்பது எப்போது என காங்கிரஸ் மேலிடம் எங்கள் இருவரிடமும் தெரிவித்துள்ளது" என கர்நாடக துணை முதல்வர் டி.கே. சிவகுமார் தெரிவித்தார்.

கர்நாடகாவில் சித்தராமையா முதல்வராக பதவியேற்று இரண்டரை ஆண்டுகள் நிறைவடைந்த நிலையில், துணை முதல்வர் டி.கே.சிவகுமாருக்கு முதல்வர் பதவி வழங்க வேண்டும் என அவரது ஆதரவாளர்கள் போர்க்கொடி உயர்த்தினர். இதுகுறித்து சிவகுமார் ஆதரவாளர்கள் டெல்லி சென்று காங்கிரஸ் மேலிடத்திடம் வலியுறுத்தியது சலசலப்பை உருவாக்கியது. அதனை தொடர்ந்து மேலிட உத்தரவின் பேரில் இரு தலைவர்களும் சமாதானம் அடைந்து இணைந்து செயல்பட்டனர்.

இந்தச் சூழலில், இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய டி.கே. சிவகுமார், "அழைப்பு வரும்போது, நாங்கள் இருவரும் டெல்லிக்குச் சென்று மேலிடத்தை சந்திப்போம். டெல்லி செல்வது பற்றி நான் உங்களுக்குத் தெரிவிப்பேன், உங்களுக்குத் தெரிவிக்காமல் நான் எதுவும் செய்ய மாட்டேன். உங்களிடமிருந்து மறைந்து நான் செல்ல மாட்டேன்" என்றார்.

சித்தராமையாவும், நீங்களும் டெல்லி செல்ல வாய்ப்புள்ளதா என்ற செய்தியாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்த அவர், " கட்சி மேலிடம் எங்கள் இருவரிடமும் இதுகுறித்து சொல்லியிருக்கிறார்கள், எப்போது அழைப்போம் என்று தொலைபேசி மூலம் எங்கள் இருவரிடமும் தெரிவித்துள்ளனர். நாங்கள் இருவரும் டெல்லி செல்வோம்.

சரியான நேரத்தில் எங்கள் இருவரையும் அழைப்போம் என்று மேலிடத்திலிருந்து எங்களிடம் கூறியுள்ளனர், நாங்கள் அந்த அழைப்பிற்காகக் காத்திருப்போம்." என்று அவர் கூறினார்.

முன்னதாக சித்தராமையா நேற்று சட்டப்பேரவையில் பேசுகையில், " எனது முதல்வர் பதவிக்காலம் பாதி காலத்திற்கு மட்டுமே என்று நான் ஒருபோதும் கூறியதில்லை. ஐந்து ஆண்டு பதவிக்காலத்தை நான் நிறைவு செய்ய மேலிடம் அனுமதிக்கும் என்பதில் எனக்கு நம்பிக்கை உள்ளது. மேலிடம் என் பக்கம்தான் இருக்கிறது என்று நான் உணர்கிறேன், ஆனால் மேலிடம் எடுக்கும் முடிவுக்கு கட்டுப்படுவேன்" என்று அவர் கூறினார்.

# SIR-க்குப் பின் விடுபட்ட தகுதியுள்ள வாக்காளர்கள் செய்ய வேண்டியது என்ன?



சென்னை, டிச.21-

தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணியில், கணக்கெடுப்பு பணி நிறைவுற்று வரைவு வாக்காளர் பட்டியல்கள் வெளியிடப்பட்டுள்ளன. அனைத்து வாக்குச்சாவடி மையங்கள், சிறப்பு முகாம்களிலும் மக்கள் பார்வைக்காக இந்தப் பட்டியல் வைக்கப்படுகிறது.

www.elections.tn.gov.in என்ற இணையதளத்திலும் வெளியிடப்பட்டுள்ளது. இதில் மக்கள் தங்களது பெயர் மற்றும் குடும்பத்தில் உள்ள வாக்காளர்களின் பெயர் விவரங்களை சரிபார்த்துக் கொள்ளலாம்.

இந்த பட்டியலின் அடிப்படையில், தகுதியுள்ள வாக்காளர்களை புதிதாக சேர்க்க அல்லது தகுதியற்ற வாக்காளர்களை நீக்க எந்த ஒரு வாக்காளரும், அரசியல் கட்சியும் தங்கள் ஆட்சேபனைகளை ஜனவரி 18ம் தேதி வரை தாக்கல் செய்யலாம். இதை ஆய்வு செய்ய 234 வாக்காளர் பதிவு அலுவலர்கள், 1,776 உதவி வாக்காளர் பதிவு அலுவலர்கள் பணியில் உள்ளனர்.

இந்தக் காலகட்டத்தில், வரைவு வாக்காளர் பட்டியலில் இடம் பெறாதவர்கள், வரும் ஜனவரி 1ம் தேதி 18 வயது பூர்த்தி அடைந்த இளம் வாக்காளர்கள் படிவம் 6ஐ பூர்த்தி செய்து வழங்கலாம்.

வாக்காளர் பட்டியலில் நிரந்தர இடமாற்ற பதிவுகள், உயிரிழந்தோர் உள்ளிட்ட ஆட்சேபனை தொடர்பாக படிவம் 7ஐ பூர்த்தி செய்தும், தொகுதிகளிலேயே ஒரு இடத்தில் இருந்து மற்றொரு இடத்துக்கு குடிபெயர்ந்து புதிய வசிப்பிடத்தில் உள்ளவர்களும், வேறு தொகுதிக்கு குடிபெயர்ந்தவர்களும் படிவம் 8ஐ பூர்த்தி செய்தும், அதற்கான ஆவண ஆதார நகல்களை இணைத்து சம்பந்தப்பட்ட சட்டப்பேரவை தொகுதிக்கு உட்பட்ட, தொடர்புடைய பகுதிக்கான வாக்காளர் பதிவு அலுவலரிடம் சமர்ப்பிக்கலாம்.

அனைத்து வாக்குச்சாவடி மையங்களில் சிறப்பு முகாம் நடைபெறும்போது உரிய படிவங்களை பிஎல்ஓக்களிடமும் சமர்ப்பிக்கலாம். www.elections.tn.gov.in என்ற இணையதளம் மூலமாகவும், பெயர் சேர்த்தல், நீக்கம், திருத்தங்கள் மேற்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணையம் சார்பில் வரும் ஜனவரி 18ம் தேதி வரை பெறப்படும் படிவங்கள் பரிசீலிக்கப்பட்டு, வரும் பிப்ரவரி மாதம் இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட உள்ளது.

தமிழகத்தில் கடந்த அக்டோபர் 27 நிலவரப்படி, 6 கோடியே 41 லட்சத்து 14 ஆயிரத்து 584 வாக்காளர்களின் பெயர்கள் இடம்பெற்றிருந்தன. நடந்து முடிந்த எஸ்ஐஆர் திருத்தத்தின்படி, தமிழகத்தில் 2,66,63,233 ஆண் வாக்காளர்கள், 2,77,06,332 பெண் வாக்காளர்கள், 7,191 இதர வாக்காளர்கள் என மொத்தம் 5 கோடியே 43,76,756 வாக்காளர்களின் பெயர்கள் வரைவு வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ளன.

உயிரிழந்த வாக்காளர்கள் 26,95,672 பேர், இடம் பெயர்ந்தோர் மற்றும் குறிப்பிட்ட முகவரியில் வசிக்காத 66,44,881 பேர், இரட்டை பதிவு வாக்காளர்கள் 3,98,278 பேர் என மொத்தம் 97,37, 831 வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழகத்தில் டிச.24 வரை அதிக குளிர் நிலவும்: வானிலை ஆய்வு மையம் கணிப்பு

சென்னை, டிச.21-

தமிழகத்தில் நாளை முதல் 24ம் தேதி வரை ஒருசில இடங்களில் வழக்கத்தைவிட குளிர் அதிகரிக்கும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் நாளை டிச.21 முதல் 24ம் தேதி வரை வறண்ட வானிலை நிலவக்கூடும். அதிகாலை வேளையில் ஓரிரு இடங்களில் லேசான பனிமூட்டம் காணப்படும்.

குமரிக்கடல் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக 25, 26 தேதிகளில் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் நாளை முதல் 24ம் தேதி வரை குறைந்தபட்ச வெப்பநிலை (குளிர்) ஒருசில இடங்களில் வழக்கத்தை விட 4 டிகிரி செல்சியஸ் வரை குறைவாக இருக்கக்கூடும். நாளை நீலகிரி மாவட்டத்தில் ஓரிரு இடங்களில் இரவு அல்லது அதிகாலை வேளையில் உறைபனி ஏற்பட வாய்ப்புள்ளது.

இன்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான குளிர் அளவுகளின்படி மலைப்பகுதியான ஊட்டியில் அதிகபட்சமாக 7 டிகிரி செல்சியஸ், சமவெளிப்பகுதியான தருமபுரியில் 15 டிகிரி செல்சியஸ் பதிவாகியுள்ளது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகாலை வேளையில் ஓரிரு இடங்களில் லேசான பனிமூட்டம் காணப்படும். குறைந்தபட்ச வெப்பநிலை (குளிர்) 21 டிகிரி செல்சியஸை ஒட்டி இருக்கக்கூடும்.

தென் தமிழக கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் குமரிக்கடல் பகுதிகளில் நாளையும், நாளை மறுதினமும் சூறாவளிக்காற்று மணிக்கு 45 முதல் 55 கிமீ வேகத்திலும், இடையிடையே 65 கிமீ வேகத்திலும் வீசக்கூடும். எனவே இப்பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம்.

இவ்வாறு செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.



# கடும் பனி: பிரதமர் மோடியின் ஹெலிகாப்டர் தரையிறங்க முடியாமல் கொல்கத்தா திரும்பியது

கொல்கத்தா, டிச.21-

மேற்கு வங்கத்தில் உள்ள தாஹேர்பூர் ஹெலிபேடில் பிரதமர் நரேந்திர மோடியின் ஹெலிகாப்டர் இன்று (டிச.20) அப்பகுதியில் நிலவிய அடர்ந்த மூடுபனியால் ஏற்பட்ட காட்சித் தெளிவின்மை காரணமாக தரையிறங்க முடியாமல் கொல்கத்தாவுக்கு திரும்பியது.

இன்று காலையில் பிரதமர் மோடியின் ஹெலிகாப்டர் தாஹேர்பூர் ஹெலிபேட் தளத்தின் மீது சிறிது நேரம் வட்டமிட்ட பிறகு, யூடர்ன் அடித்து கொல்கத்தா விமான நிலையத்துக்கே திரும்பியது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து, பிரதமர் மோடி பேரணி நடைபெறும் தாஹேர்பூருக்கு சாலை மார்க்கமாகச் செல்வாரா அல்லது வானிலை சீரடையும் வரை காத்திருந்து, வான்வழி மார்க்கமாகவே செல்வாரா என்பது உடனடியாகத் தெரியவில்லை என்று அந்த அதிகாரிகள் கூறினர்.

முன்னதாக, இன்று காலை 10.40 மணியளவில் பிரதமர் மோடி கொல்கத்தா வந்தடைந்தார். அங்கிருந்து நதியா மாவட்டத்தில் உள்ள தாஹேர்பூருக்கு ஹெலிகாப்டரில் புறப்பட்டார். தாஹேர்பூரில் அவர் மேற்கு வங்கத்தில் நெடுஞ்சாலைத் திட்டங்களைத் தொடங்கி வைக்கும் ஒரு நிகழ்ச்சியிலும், அதைத் தொடர்ந்து 'பரிவர்த்தன் சங்கல்ப் சபா' என்ற பெயரில் நடைபெறும் பாஜகவின் அரசியல் பேரணியிலும் உரையாற்ற உள்ளார்.

# தோஷகானா வழக்கு: பாக். முன்னாள் பிரதமர் இம்ரான் கானுக்கு 17 ஆண்டுகள் சிறை தண்டனை



ராவல்பிண்டி, டிச.21-

தோஷகானா வழக்கில் பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்மான் கான், அவரது மனைவி புஷ்ரா பீபி ஆகிய இருவருக்கும் அந்நாட்டு சிறப்பு நீதிமன்றம் 17 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது. மேலும், இருவருக்கும் தலா ரூ.1.64 கோடி அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

அரசு ஊழியர்கள் அரசுமுறைப் பயணமாக வெளிநாடுகளுக்குச் செல்லும் போது அங்கு அளிக்கப்படும் பரிசுகள் விஷயத்தில் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகளை அந்நாட்டு அரசு வகுத்துள்ளது. தோஷகானா கொள்கை என இது அழைக்கப்படுகிறது.

பாகிஸ்தான் பிரதமராக இருந்த இம்ரான் கான் அரசுமுறைப் பயணமாக கடந்த 2021ம் ஆண்டு மே மாதம் சவூதி அரேபியா சென்றிருந்தார். அப்போது அந்நாட்டின் பட்டத்து இளவரசர், அவருக்கு விலையுயர்ந்த பல்கேரி நகைகளை பரிசாக வழங்கி உள்ளார். அரசு கருவூலத்துக்கு மிகக் குறைந்த தொகையை செலுத்தி, விலை உயர்ந்த பரிசுப் பொருட்களை இம்ரான் கான் தனதாக்கிக் கொண்டதாகவும் இது தோஷகானா கொள்கை 2018க்கு முரணானது என்றும் கூறி அவருக்கும் அவரது மனைவிக்கும் எதிராக மத்திய புலனாய்வு அமைப்பு (FIA) கடந்த ஆண்டு வழக்கு தொடர்ந்தது.

தற்போது ராவல்பிண்டியில் உள்ள அடியாலா சிறையில் இம்ரான் கான் அடைக்கப்பட்டுள்ளதால், சிறப்பு நீதிமன்ற நீதிபதி ஷாருக் அர்ஜுமந்த் அங்கேயே தனது தீர்ப்பை வழங்கினார். அந்த தீர்ப்பில், "பாகிஸ்தான் தண்டனைச் சட்டம் 34 (பொது நோக்கம்) மற்றும் 409 (குற்றவியல் நம்பிக்கை மீறல்)ன் கீழ் இருவருக்கும் 10 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்படுகிறது. மேலும், ஊழல் தடுப்புச் சட்டத்தின் பிரிவு 5(2) (அரசு ஊழியர்களின் தவறான நடத்தை)ன் கீழ் 7 ஆண்டுகள் சிறைத் தண்டனையும் என மொத்தம் 17 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்படுகிறது. மேலும் இருவருக்கும் தலா ரூ. 1.64 கோடி அபராதமும் விதிக்கப்படுகிறது.

இம்ரான் கானின் வயது முதிர்வை கருத்தில் கொண்டும் புஷ்ரா பீபி ஒரு பெண் என்பதையும் கருத்தில் கொண்டு இருவருக்கும் மனிதாபிமான அடிப்படையில் குறைந்த தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. அபராதத்தைச் செலுத்தத் தவறினால் கூடுதல் சிறைத் தண்டனை விதிக்கப்படும்" என தெரிவித்துள்ளார்.

முன்னதாக கடந்த அக்டோபரில் இந்த வழக்கில் இருவரும் ஆஜராகினர். அப்போது, தங்கள் மீதான குற்றச்சாட்டை இருவரும் முழுமையாக மறுத்தனர். "பிரதமர் என்ற போதிலும் நான் ஒரு அரசு ஊழியர் அல்ல. எனது மனைவிக்கு வழங்கப்பட்டதாகக் கூறப்படும் அந்த பரிசு குறித்த விவரங்கள் எனக்குத் தெரியாது. தோஷகானா கொள்கையின் நடைமுறைகளைப் பின்பற்றி நகைகள் மதிப்பிடப்பட்டு, அதற்கு ஈடான தொகை தேசிய கருவூலத்தில் செலுத்தப்பட்டது. அதன்பிறகே அந்த நகைகள் சட்டப்பூர்வமாக சொந்தமாக்கிக் கொள்ளப்பட்டன" என இம்ரான் கான் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



# திமுக ஆட்சியில் சிறுபான்மையினருக்கு நலத்திட்டங்கள் மறுப்பு: பழனிசாமி குற்றச்சாட்டு

சென்னை, டிச.21-

அதிமுக சார்பில் கீழ்ப்பாக்கத்தில் உள்ள சிஎஸ்ஐ தேவாலயத்தில் கிறிஸ்துமஸ் விழா நேற்று முன்தினம் கொண்டாடப்பட்டது. கட்சியின் பொதுச் செயலாளர் பழனிசாமி பங்கேற்று ஏழை, எளிய மக்களுக்கு தையல் இயந்திரம், இஸ்திரிப்பெட்டி, மாற்றுத் திறனாளிகளுக்கு மூன்றுசக்கர வாகனம் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள், இனிப்புகள் அடங்கிய பரிசுப் பைகளை வழங்கினார்.

பின்னர், நிகழ்ச்சியில் பழனிசாமி பேசியதாவது: பரம்பரையாக தாங்களே பதவி சுகத்தை அனுபவிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு, வாக்கு வங்கிக்காக ஆட்டுத்தோலை போர்த்திக் கொண்டு வரும் ஓநாய் கூட்டத்தினரிடம் சிறுபான்மையினர் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

தீய சக்திகளிடம் நாம் ஏமாந்து போய்விட்டால், பின்னர் 'விடியல்' என்பதே இருக்காது. தமிழகம் இருளில் மூழ்கி விடும். எனவே நாம் விழிப்புடன் செயல்படும் காலம் இது.

சிறுபான்மை மக்களுக்கு அதிமுக அரசின் மூலம் கிடைத்து வந்த பல நலத்திட்டங்கள் திமுக ஆட்சிக்கு வந்த இந்த 55 மாத காலத்தில் கிடைப்பதில்லை. எம்ஜிஆர் தொடங்கி, இன்று வரை சாதி மதங்களுக்கு அப்பாற்பட்ட ஒரு சமூக நல்லிணக்க இயக்கம் அதிமுக. சிறுபான்மை மக்களின் உரிமைகள் காக்கப்பட வேண்டும் என்பதில் எப்போதும் உறுதியாக இருக்கும் இயக்கம்.

எனவே, சிறுபான்மை சமுதாய மக்கள் வரும் தேர்தலில் விழிப்போடு செயல்பட்டு தீய சக்திகளை அடையாளம் கண்டு, அவர்களை ஆட்சி அதிகாரத்தில் இருந்து அப்புறப்படுத்தி, தமிழகத்தில் நடக்கும் சீர்கேட்டை களைய அதிமுகவுக்கு முழு ஆதரவு அளிக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

முன்னாள் அமைச்சர்கள் பொன்னையன், செம்மலை, நத்தம் விஸ்வநாதன், திண்டுக்கல் சீனிவாசன், ஜெயக்குமார், வைகைச்செல்வன், பெஞ்சமின், இன்பதுரை எம்.பி. மாவட்டச் செயலாளர்கள் தி.நகர் சத்யா, வி.எஸ். பாபு உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

# ட்ரம்ப்புடன் 'அமைதி'யை மீட்டெடுக்கவே அணுசக்தி மசோதா நிறைவேற்றம்: காங்கிரஸ் விமர்சனம்



புதுடெல்லி, டிச.21-

அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் உடனான அமைதியை மீட்டெடுக்கவே அணுசக்தி மசோதா வலுக்கட்டாயமாக நிறைவேற்றப்பட்டதாக காங்கிரஸ் விமர்சித்துள்ளது.

இது தொடர்பாக காங்கிரஸ் செய்தித் தொடர்பு பொதுச் செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "அதிபர் ட்ரம்ப், அமெரிக்காவின் 2026 நிதியாண்டுக்கான தேசிய பாதுகாப்பு அங்கீகாரச் சட்டத்தில் தற்போது கையெழுத்திட்டுள்ளார். அந்த சட்டம் 3,100 பக்கங்களைக் கொண்டது. அதன் 1912வது பக்கத்தில், அணுசக்திப் பொறுப்பு விதிகள் தொடர்பாக அமெரிக்கா மற்றும் இந்தியா இடையே கூட்டு மதிப்பீடு குறித்த குறிப்பு உள்ளது.

கடந்த 2010ம் ஆண்டு, நாடாளுமன்றத்தால் ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட அணுசக்தி சேதத்துக்கான சிவில் பொறுப்புச் சட்டத்தின் முக்கிய விதிகளை நீக்கிய 'சாந்தி' மசோதாவை பிரதமர் ஏன் நாடாளுமன்றத்தில் வலுக்கட்டாயமாக நிறைவேற்றினார் என்பது இப்போது நமக்குத் தெளிவாகத் தெரிகிறது. ஒரு காலத்தில் தனது நண்பராக இருந்தவருடன் சாந்தியை மீட்டெடுக்கவே இது நிறைவேற்றப்பட்டுள்ளது. 'சாந்தி' சட்டத்தை ட்ரம்ப் சட்டம் என்றும் அழைக்கலாம். அதாவது, உலை பயன்பாடு மற்றும் மேலாண்மை வாக்குறுதிச் சட்டம் (TRUMP Act - The Reactor Use and Management Promise Act)" என தெரிவித்துள்ளார்.

முன்னதாக, இந்தியாவை மாற்றுவதற்கான அணுசக்தியின் நிலையான பயன்பாடு மற்றும் மேம்பாட்டு மசோதா, 2025ஐ [Sustainable Harnessing and Advancement of Nuclear Energy for Transforming India (SHANTI)] அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை இணையமைச்சர் ஜிதேந்திர சிங் கடந்த 15ம் தேதி நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்தார். இந்த மசோதா குறித்து குறிப்பிட்ட அணுசக்தி அமைச்சகம், "அணுசக்தியை நிர்வகிக்கும் இந்தியாவின் சட்ட கட்டமைப்பைப் புதுப்பிக்கும் நோக்கிலானது இந்த மசோதா. இந்த மசோதா, 1962ம் ஆண்டு அணுசக்தி சட்டம் மற்றும் 2010ம் ஆண்டு அணுசக்தி சேதத்துக்கான சிவில் பொறுப்புச் சட்டம் ஆகியவற்றை ரத்து செய்து, தற்போதைய மற்றும் எதிர்கால எரிசக்தித் தேவைகளுக்கு ஏற்ப விரிவான ஒரு சட்டத்தால் மாற்ற முயல்கிறது.

இந்த மசோதா, இந்தியாவின் நீண்டகால எரிசக்தி மற்றும் காலநிலை இலக்குகளுடன் இணைக்கப்பட்டுள்ளது. 2070ம் ஆண்டுக்குள் கார்பன் நீக்கத்துக்கான நாட்டின் செயல் திட்டத்தையும், 2047ம் ஆண்டுக்குள் 100 ஜிகாவாட் அணுசக்தி திறனை அடைவதற்கான இலக்கையும் இது கோடிட்டு காட்டுகிறது. இந்த நோக்கங்களை நிறைவேற்ற, உள்நாட்டு அணுசக்தி வளங்களை முழுமையாகப் பயன்படுத்தி, பொது மற்றும் தனியார் துறைகளின் தீவிர பங்கேற்பை செயல்படுத்த வேண்டியதன் அவசியத்தை மசோதா வலியுறுத்துகிறது.

அணுசக்தி உற்பத்தி அல்லது பயன்பாட்டில் ஈடுபட்டுள்ள குறிப்பிட்ட நபர்களுக்கு உரிமம் மற்றும் பாதுகாப்பு அங்கீகாரத்துக்கான விதிகளை மசோதா வகுப்பதுடன், இடைநிறுத்தம் அல்லது ரத்து செய்வதற்கான தெளிவான காரணங்களையும் வழங்குகிறது. சுகாதாரம், உணவு மற்றும் விவசாயம், தொழில் மற்றும் ஆராய்ச்சி போன்ற துறைகளில் அணு மற்றும் கதிர்வீச்சு தொழில்நுட்பங்களின் பயன்பாட்டை ஒழுங்குபடுத்த முயல்கிறது, அதே நேரத்தில் ஆராய்ச்சி, மேம்பாடு மற்றும் புதுமை நடவடிக்கைகளுக்கு உரிமத் தேவைகளிலிருந்து விலக்கு அளிக்கிறது" என தெரிவித்திருந்தது.

பின்னர் இந்த மசோதா மீது விவாதம் நடத்தப்பட்டது. இந்த மசோதாவுக்கு எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்தன. மசோதாவை நாடாளுமன்றக் கூட்டுக்குழு பரிசீலனைக்கு பரிந்துரைக்க வேண்டும் என்றும் அவை வலியுறுத்தின. இதை அரசு நிராகரித்தது. இதனால், எதிர்க்கட்சி எம்.பி.க்கள் வெளிநடப்பு செய்தனர். அதன் பின்னர் குரல் வாக்கெடுப்பு மூலம் இந்த மசோதா நிறைவேற்றப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000